பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 04 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அசாம், கேரளம், புதுச்சேரியில் நாளை, சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீசுசில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. வாக்குப்பதிவின்போது வாக்குச்சாவடி முகவர்கள் இருக்கை தொடர்பாக எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி 3 நாள் பயணமாக இன்று அமெரிக்கா செல்கிறார்.

4. ஈரானில் வசிக்கும் இந்தியர்கள் தேவையின்றி இருப்பிடத்தை விட்டு வெளியேறுவதை தவிர்க்குமாறு வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

5. இரண்டு வார கால சண்டை நிறுத்தத்திற்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், சம்மதம் தெரிவித்திருப்பதால், ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்க ஈரான் ஒப்புக்கொண்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

அசாம், கேரளம், புதுச்சேரியில் நாளை, சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அசாமில் 126 தொகுதிகளிலும், கேரளத்தில் 140 தொகுதிகளிலும், புதுச்சேரியில் 30 தொகுதிகளிலும் நாளை ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்த மாநிலங்களில் நேற்று மாலையுடன் பிரச்சாரம் முடிவுக்கு வந்துள்ளது.

வரும் 29ஆம் தேதி மேற்குவங்கத்தில் 2வது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு முடிவடையும் வரை கருத்துக் கணிப்புகள் வெளியிடுவதற்கு தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

வாக்குப்பதிவு தொடர்பாக மறைமுகமாக எந்தவொரு கணக்கெடுப்பும் மேற்கொள்வதற்கம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ள 2 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரியில் வாக்குச்சாவடிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், VVPAT கருவிகள் மற்றும் எழுதுபொருட்கள்

உள்ளிட்டவற்றை கொண்டு செல்லும் பணிகளில் தேர்தல் அலுவலர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்வதற்காக கொடி அணிவகுப்பும் நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே தமிழகத்தில் ஒரேகட்டமாக 234 தொகுதிகளிலும், மேற்குவங்கத்தில் முதற்கட்டமாக 152 தொகுதிகளிலும் வரும் 23ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், இந்த தொகுதிகளில் வேட்புமனுக்கள் பரிசீலனை நேற்று நடைபெற்றது.

இந்த தொகுதிகளில் மனுக்களைத் திரும்பப் பெற நாளை கடைசி நாளாகும்.

நாளை மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

தமிழ்நாடு உள்ளிட்ட 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரியில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 4ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகும்.

<<<<>>>>

வாக்குப்பதிவின்போது வாக்குச்சாவடி முகவர்கள் இருக்கை தொடர்பாக எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலின்போது பல்வேறு அரசியல் கட்சிகளின் முகவர்கள் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிகளுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று குறிப்பிட்ட சில ஊடகங்களில் தகவல்கள் பரவியதை தேர்தல் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதுபோன்ற எந்தவொரு விதிமுறைகளும் வெளியிடப்படவில்லை என்ற தெளிவுபடுத்தியுள்ள தேர்தல் ஆணையம் ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிமுறைகள் எந்த மாற்றமும் இன்றி தொடரும் என்று கூறியுள்ளது.

<<<<>>>>

வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி 3 நாள் பயணமாக இன்று அமெரிக்கா செல்கிறார்.

தமது இந்தப் பயணத்தின்போது அமெரிக்காவின் மூத்த அதிகாரிகளுடன் வர்த்தகம், பாதுகாப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் பலன் அளிக்கக்கூடிய உலகளாவிய மற்றும் பிராந்திய அளவிலான முன்னேற்றங்கள் குறித்தும் திரு. விக்ரம் மிஸ்ரி ஆலோசனை நடத்த இருப்பதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா - அமெரிக்கா இடையே தற்போதைய நல்லுறவுகளை மேம்படுத்தும் வகையிலான ஆலோசனை நடத்துவதற்கான வாய்ப்பாக திரு. விக்ரம் மிஸ்ரியின் இந்தப் பயணம் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

காமன்வெல்த் நாடாளுமன்ற அமைப்பின் 7வது மண்டல முதல் மாநாட்டை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கோவாவில் நாளை தொடங்கி வைக்கிறார்.

பனாஜியில் இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் வரும் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை எட்டுவதற்கான இலக்கில் “இளம் சட்டமன்ற உறுப்பினர்களின் பங்கு”

என்ற கருப்பொருள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் முக்கியமான விஷயங்களில் முன்னுரிமை கருத்துகளை பரிமாறிக்கொள்வதற்கும் இந்த மாநாடு வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல் போக்குவரத்தை அனுமதித்தால், அமெரிக்கா - ஈரான் இடையே இரண்டு வார கால சண்டை நிறுத்தத்திற்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் சம்மதம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இருதரப்பிலும் சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க ராணுவத்தைப் பொறுத்தவரை தனது இலக்குகளை ஏற்கனவே எட்டியிருப்பதாகவும், தற்போதைய தாக்குதல்கள் முடிவுக்கு வந்து தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் கோரிக்கைகளை ஏற்காவிட்டால் டெஹ்ரானில் எரிசக்தி நிலையங்கள், பாலங்கள் உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என்று திரு. ட்ரம்ப் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை அமெரிக்காவும், இஸ்ரேலும் நிறுத்தினால் சண்டை நிறுத்தம் மேற்கொள்ள தாங்கள் ஒப்புக்கொள்வோம் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

அடுத்த 2 வார காலத்திற்கு ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல்கள் பாதுகாப்பாக கடந்து செல்ல வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

என்றாலும் ஈரானின் பாதுகாப்புப் படையினர் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின் ஒருங்கிணைப்பின் மூலமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று திரு. அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஈரானில் ஏற்பட்டு வரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அங்கு வசிக்கும் இந்தியர்கள் தேவையின்றி தங்களின் இருப்பிடத்தை விட்டு வெளியேற வேண்டாம் என்று வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

ஈரான் நாட்டிற்குள் இந்தியர்கள் பயணம் செய்ய விரும்பினாலோ, எல்லையைக் கடந்து செல்ல தேவை ஏற்பட்டாலோ டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு வெளியுறவு அமைச்சகம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்திய தூதரகத்தின் விரிவான வழிகாட்டுதலின் அடிப்படையிலேயே இந்தியர்கள் தங்கள் பயணத்தை மேற்கொள்ளுமாறு அந்த அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

தூதரகம் வெளியிடும் தகவல்களை இந்தியர்கள் உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்றும் அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தூதரக செல்ஃபோன் மற்றும் மின்னஞ்சல் மூலமாக இந்தியர்கள் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்க வலியுறுத்தும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தின் மீது ரஷ்யாவும், சீனாவும் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்த்து வாக்களித்தன.

உலக அளவில் 5வது மிகப்பெரிய நீரிணையான ஹோர்முஸ் மூடப்பட்டிருப்பதால் பல்வேறு நாடுகளுக்கும் கச்சா எண்ணெய் போக்குவரத்து தடைபட்டுள்ளது.

இந்த நிலையில் பஹ்ரைன், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் 11 நாடுகள் ஆதரவாகவும், 2 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 2 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன.

ரஷ்யாவும், சீனாவும் நிரந்தர உறுப்பு நாடுகள் என்பதால் அந்த நாடுகளின் எதிர்ப்பு காரணமாக தீர்மானத்தை நிறைவேற்ற முடியவில்லை.

<<<<>>>>

ரிசர்வ் வங்கி தனது பணக் கொள்கை தொடர்பான அறிவிப்பை இன்று வெளியிடுகிறது.

நடப்பு நிதியாண்டுக்கான பணக் கொள்கை குழுவின் முதல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா இன்று காலை 10 மணிக்கு வெளியிடுகிறார்.

ரிசர்வ் வங்கி ஆளுநர் தலைமையில் 6 பேர் கொண்ட இந்த குழு, வங்கி வட்டி விகிதம், பணவீக்கம் தொடர்பான முடிவுகள்,

வளர்ச்சி குறித்த எதிர்பார்ப்பு போன்றவை குறித்து எடுக்கப்பட்ட முடிவுகள் அவருடைய அறிவிப்பில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி, 27 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

மழை காரணமாக ஆட்டம் 11 ஓவர்களாக குறைக்கப்பட்டதை அடுத்து, முதலில் விளையாடிய ராஜஸ்தான் அணி, 3 விக்கெட் இழப்புக்கு 150 ரன் எடுத்தது.

151 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 11 ஓவரில் 9 விக்கெட்டுகளை இழந்து 123 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

-------------

ஆசிய சீனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் லலித் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

கிர்கிஸ்தானின் Bishkek-ல் நடைபெறும் இந்தப் போட்டியின் 55 கிலோ எடைப்பிரிவு இறுதியாட்டத்தில் இவர், உஸ்பெகிஸ்தானின்

**Ikhtiyor Botirov**-விடம் வெற்றி வாய்ப்பை இழந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

**97** கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் நிதேஷ் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

அரையிறுதிப் போட்டியில் இவர் சீனாவின் **Zegang Wang**-ஐ **7-2** என்ற புள்ளிக் கணக்கில் வென்றார்.

**87** கிலோ எடைப் பிரிவில் முன்னாள் சாம்பியன் சுனில் குமார் வெண்கலப் பதக்கம் வென்றார்.

--------------

இந்தோ - திபெத் காவல்படை ஏற்பாடு செய்துள்ள **25**து அகில இந்திய தண்ணீர் விளையாட்டுப் போட்டிகள் உத்தராகண்ட் மாநிலம் தெஹ்ரி-யில் இன்று தொடங்குகிறது.

வரும் **12**ஆம் தேதி வரை **5** நாட்கள் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

நாடு முழுவதிலும் இருந்து **19** அணிகள் **52** பிரிவுகளில் பல்வேறு போட்டிகளில் பங்கேற்க இருப்பதாக இந்தோ-திபெத் காவல் படைத் தலைவர் திரு. மனு மஹராஜ் தெரிவித்துள்ளார்.

**<<<<The End>>>>**